**ஐக்கிய அமெரிக்கத் தூதரகம்**
கொழும்பு
**ஊடக அறிக்கை**
பொது அலுவல்கள் பிரிவு
தொலை பேசி: +94 (11) 202-8500 ● தொலை நகல்: +94 (11) 243-7345
மின்னஞ்சல்: HattenbachHS@state.gov ● இணையத்தளம்: http://lk.usembassy.gov

ஊடக அறிக்கை இலக்கம்: 20230319

**இலங்கையை வந்தடைந்த அமெரிக்க அரசின் நிதியுதவியுடனான 36, 000 மெட்ரிக் தொன் TSP உரம்: சிறுபோக நெற்செய்கைக்கான TSP உரத்தினை உரியநேரத்தில் பெறவிருக்கும் நெல் விவசாயிகள்.**

கொழும்பு, இலங்கை 19 மார்ச் 2023 - அமெரிக்காவினால் இன்று விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்ட 36,000 மெட்ரிக் தொன்னிற்கும் மேற்பட்ட உரத்தின் மூலம் 25 மாவட்டங்களிலுமுள்ள ஒரு மில்லியனுக்கும் அதிகமான இலங்கை நெல் விவசாயிகளுக்கு அத்தியாவசியமான உதவி கிடைக்கப்பெறும்.

விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிக்கப்பதற்காக இன்று கையளிக்கப்பட்ட Triple Super Phosphate (TSP) உரத்திற்கான நிதியினை சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பு (USAID) வழங்கியதுடன் அதன் பெறுகை நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மேற்கொண்டது. USAID இன் உதவியுடன் விநியோகிக்கப்படும் உரத்தின் இந்த இரண்டாவது தொகுதியானது இலங்கையின் உணவுப் பாதுகாப்பு சவால்களுக்குப் பதிலளிக்கும் வகையில் USAID நிர்வாகி சமந்தா பவர் கடந்த செப்டெம்பர் மாதம் வழங்கிய ஒரு வாக்குறுதியின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இத்துடன் கடந்த ஆண்டில் USAID இன் உதவியுடன் வழங்கப்பட்ட TSP மற்றும் யூரியா உரங்களின் மொத்த அளவானது 45,000 மெட்ரிக் தொன்களையும் விட அதிகமாகும்.

“நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், கடினமான சூழ்நிலையில் நாட்டின் உணவுத் தேவையை பூர்த்தி செய்வதற்கும் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு உதவிசெய்வதற்கு அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. இவ்வருடம் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75 வருட நிறைவினை நாம் கொண்டாடுகிறோம். எங்கள் கதையானது மக்கள், முன்னேற்றம் மற்றும் பங்காண்மை ஆகியவற்றின் மீது கவனத்தைக் குவித்த ஒன்றாகும். நல்ல நேரத்திலும் கெட்ட நேரத்திலும் இலங்கை மக்களுக்கு உதவிசெய்வதற்கான எங்களது உறுதி ஒருபோதும் தளராது.” என அமெரிக்கத் தூதுவர் ஜூலீ சங் கூறினார்.

“இன்று வழங்கப்படும் உர நன்கொடையானது, இலங்கை மக்கள் தொடர்பான அமெரிக்காவின் நீடித்த நல்லெண்ணம் மற்றும் அவர்களின் நலன்களுக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றின் ஒரு வெளிப்படையான அத்தாட்சியாகும். எவ்வித நிபந்தனைகளோ அல்லது எதிர்பார்ப்புகளோ இன்றி வழங்கப்படும் இவ்வுரநன்கொடையானது எந்தளவிற்கு அமெரிக்க மக்கள் இலங்கை மக்களுக்கு உறுதுணையாக இருக்கிறார்கள் என்பதற்கான ஒரு சான்றாகும்.” என தூதுவர் சங் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்காவானது அத்தியாவசிய உரங்களைப் பெற்றுக்கொள்வதற்கும், நெற்பயிர்களுக்கு அவசியமான போஷணைப் பதார்த்தங்களை வழங்குவதன் மூலம் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கும், உணவு நெருக்கடியைத் தவிர்ப்பதற்கும் USAID ஊடாக 46 மில்லியன் டொலர் நிதியுதவியினை வழங்கியுள்ளது. இந்த நிதியுதவி மூலமாக கடந்த சில விவசாய பருவங்களில் கிடைத்த குறைவான விளைச்சல் மற்றும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றின் காரணமாக பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகளுக்குப் பண உதவியும் வழங்கப்பட்டது. வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கான மேற்பார்வை ஏற்பாடுகளுடன் UN FAO இனால் இந்நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இவ்வுரத்தினை கையளிக்கும் நிகழ்வில் உரையாற்றிய விவசாய அமைச்சர் கௌரவ மஹிந்த அமரவீர உள்ளூர் விவசாயத் துறைக்குப் புத்துயிரூட்டுவதற்கு சரியான நேரத்தில் உதவி செய்தமைக்காக அமெரிக்க மக்களுக்கும் FAO இற்கும் தனது நன்றியைத் தெரிவித்தார். “இந்த உதவியின் ஊடாக, எதிர்வரும் அறுவடைப் பருவங்களின் விளைச்சலானது சீராக மேம்படும் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். அரிசி இறக்குமதியில் தங்கியிருப்பதைக் குறைத்து இலங்கை நெல் விவசாயிகளை மேலும் வலுப்படுத்துவதே எமது இறுதி நோக்கமாகும்” என அமைச்சர் அமரவீர மேலும் தெரிவித்தார்.

“உள்ளூர் விவசாயிகள் தங்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்கு உரம் உதவி செய்யும், இதன் மூலம் நாட்டின் உணவுப் பாதுகாப்பு உறுதிசெய்யப்படும். மிக முக்கியமாக, இது சந்தை அடிப்படையிலான விவசாய உற்பத்தியை ஆரம்பிப்பதற்கும் ஒரு உணவு ஏற்றுமதியாளராக இலங்கையை மாற்றுவதற்கும் வழிவகுக்கும்,” என இலங்கை மற்றும் மாலைதீவிற்கான USAID செயற்பணிப் பணிப்பாளர் கெப்ரியல் கிராவ் தெரிவித்தார்.

கடந்த வருடத்தில் தற்போதய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இலங்கையர்களுக்கு 270 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பெறுமதியுடைய புதிய உதவிகளை அமெரிக்கா வழங்கியுள்ளது. அவற்றிற்கு மேலதிகமாக, இலங்கைக்கான ஐ.நா மனிதாபிமான தேவைகள் திட்டத்திற்கான (UN Humanitarian Needs Plan for Sri Lanka) மிகப்பெரிய நன்கொடையாளராகவும் அமெரிக்கா விளங்குகிறது.

“இரண்டு ஆண்டுகளில் முதல் முறையாக நாட்டை வந்தடைந்த இந்த TSP உரத்தொகுதியினைப் பெற்றுக் கொள்வதற்கு ஒரு சிரமமான கட்டத்தில் வழங்கிய உதவிக்காக அமெரிக்க அரசாங்கத்திற்கு நாங்கள் நன்றி கூறுகிறோம். இவ்வுரமானது அனைத்து நெல் விவசாயிகளுக்கும் அவர்கள் விவசாயம் செய்யும் பரப்பளவு மற்றும் ஒவ்வொரு விவசாய வலயத்திற்கும் பிரயோகிப்பதற்குப் பரிந்துரைக்கப்பட்ட அளவு ஆகியவற்றின் அடிப்படையில் விவசாய அமைச்சின் உதவியூடாக விநியோகிக்கப்படும்.” என இலங்கை மற்றும் மாலைதீவிற்கான FAO பிரதிநிதி திரு விம்லேந்திர ஷரன் கூறினார்.

இன்று இடம்பெற்ற கையளிப்பு நிகழ்வில் தூதுவர் சங் மற்றும் USAID செயற்பணிப் பணிப்பாளர் கிராவ் ஆகியோருடன் அமைச்சர் அமரவீர மற்றும் FAO பிரதிநிதி ஷரன் ஆகியோர் இணைந்து கொண்டனர்.

இவ்வுதவியானது ஆரோக்கியமான, கல்வியறிவுள்ள மற்றும் தொழில்புரியும் சனத்தொகையொன்றை ஊக்குவிப்பதற்காக இலங்கை மக்களுடன் அமெரிக்கா கொண்டுள்ள நீண்டகாலமாக நிலைத்திருக்கும் பங்காண்மையின் அங்கமொன்றாகும். USAID இன் பணிகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வதற்கு, usaid.gov/sri-lanka எனும் இணையத்தளத்தினைப் பார்வையிடுவதுடன் Twitter @USAIDSriLanka மற்றும் Facebook @USAIDSriLankaMaldives ஆகியவற்றினூடாக எம்மைப் பின்தொடரவும்.

பசியைத் தோற்கடிப்பதற்கான சர்வதேச முயற்சிகளை FAO முன்னின்று வழிநடத்துகிறது. அது உலக நாடுகள் விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடி நடைமுறைகளை நவீனப்படுத்துவதற்கும் வலுப்படுத்துவதற்கும் உதவி செய்து அவற்றை மிகவும் நிலைபேறானதாக ஆக்குவதுடன் அனைவருக்கும் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்கிறது. மேலதிக தகவல்களுக்கு: www.fao.org இனைப் பார்வையிடவும் அல்லது Twitter @FAOSriLanka மற்றும் @FAONews ஆகியவற்றினூடாக FAO இனைப் பின்தொடரவும்.